# வாலிபன்
# VAALIPAN

**வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை**



**அற்பமான ஆரம்பத்தின் நாளை (25.12.2007) யார் அசட்டை பண்ணலாம்?**
**(சகரியா 4:10)**

## இதழ் - 36, கார்த்திகை 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபன்
# VAALIPAN

**அன்பான 'வாலிபன்' வாசகர்களுக்கு!**

இரட்சகரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

இந்நாள் வரைக்கும் இவ் ஊழியத்திற்காக ஜெபித்த, ஆக்கங்களை எழுதிய, உதவிகளை நல்கிய உங்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவர் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக! தொடர்ந்தும் இவ் ஊழியமானது மென்மேலும் வளர்ச்சியடையவும், ஆண்டவரை அறியாத ஜனங்களும் இவ் ஊழியத்தின் மூலம் தொடப்படவும் **பாரத்தோடு ஜெபியுங்கள்.**

"இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள், **வாலிபரும் இடறிவிழுவார்கள்**" (ஏசா. 40:30) என்ற தேவ வார்த்தையானது இன்றைய நாட்களில் நிறைவேறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. **'உலகம் துன்மார்க்கர் கையில் விடப்பட்டிருக்கிறது'** (யோபு 9:24) என்பதையுணராமல் பல வாலிபர்கள் இடறி விழுகிற இந்த நாட்களில் எம் தேசத்திலுள்ள ஒவ்வொரு வாலிபர்களுக்காகவும் **கண்ணீரோடு ஜெபியுங்கள்!**

ஆண்டவர் உங்கள் ஒவ்வொருவரையும் தமது கருவியாக எடுத்து பயன்படுத்துவராக!

**கண்ணீரோடு விதையுங்கள். கர்த்தர் கெம்பீரத்தோடே அறுக்கச் செய்வார்.** (சங். 126:5)

*இவ்வண்ணம்*
*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*

வெகுவிரைவில் வாலிபன் ஊழியத்தினூடாக "வாலிபர் உபவாச பாசறை" ஒன்று ஒழுங்குபடுத்த திட்டமிட்டுள்ளோம். இது பாரியளவில் ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பதால் இதற்கான இடமும் காலமும் தேவைகளும் சந்திக்கப்பட ஜெபியுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

**கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்....6**

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

குழந்தைப் பருவத்திலிருந்து பெற்ற பயிற்சியையும், உபதேத்தையும் காற்றில் பறக்கவிட்டு கீழே விழுந்துபோன நிலையை ஜோன் வெஸ்லி அடைந்ததைத் தெளிவாகக் காண முடிகிறது. விசுவாசத்தைப் பற்றி உறுதியான பயிற்சி பெற்றிருந்த ஜோன் வெஸ்லி இப்பொழுது அதைவிட்டு விலகித் தம்முடைய இரட்சிப்பின் நம்பிக்கையைச் சில சாதாரண காரியங்களில் பதித்திருந்தது மிகவும் ஆச்சரியமே! ஜோன் வெஸ்லி இதைப்பற்றி 'இரட்சிப்பு' எனும் நூலில் விபரிக்கும் போது, "நான் மற்றவர்களைப் பார்க்கிலும் மிக மோசமான நிலையில் இல்லாதிருப்பதன் மூலமாகவும், பக்திக்குரியவைகளில் இன்னும் மகிழ்ச்சி கொண்டிருப்பதின் மூலமாகவும், வேதம் வாசித்து, ஒழுங்காக ஆலயத்திற்குச் சென்று, என் ஜெபங்களை ஏறெடுப்பதினாலும் நான் இரட்சிக்கப்படலாம் என்று நம்பிக்கொண்டிருந்தேன்" என எழுதுகிறார்.

இக்காலத்தில், நமது கிறிஸ்துவின் சரியான போதனையிலிருந்து அவர் எவ்வளவு விலகி வந்துள்ளார் என்பதை அறியலாம். வெஸ்லி இரட்சிப்பைக் குறித்து மேலே குறிப்பிட்ட அந்தக் காரியங்கள் யாவையும் சற்றும் பிசகாவண்ணம் ஒரு மனிதன் நிறைவேற்றினாலும் கூட, அவன் ஓர் உண்மையுள்ள கிறிஸ்தவனாக முடியாது. அந்நாட்டிகளில் திருச்சபை வாழ்க்கையோ வீழ்ச்சியுற்றிருந்தது. உலகப் பிரகாரமான வாழ்க்கையிலும், ஆவிக்குரிய வாழ்க்கையிலும் கூட ஒழுக்கக்கேடுகள் மலிந்து கிடந்தன. இவைகள் யாவும் ஒன்றுசேர்ந்து வெஸ்லியை "மற்றவர்களைப் போன்று தான் அவ்வளவு கெட்டவரல்ல" என்று எண்ணித் திருப்தி கொள்ளும்படியான ஒரு **சுயதிருப்தியான** நிலைக்குக் கொண்டு போயின. ஜோன் வெஸ்லி இரட்சிக்கப்பட்ட பின், யார் துன்மார்க்கமாக வாழ்கிறார்களோ, அவர்கள் தம்மைக் காட்டிலும் மோசமாய் வாழும் மக்களோடு ஒப்பிட்டுப் பார்த்து திருப்தி கொள்வார்களென்று திட்டமாய் உணர்ந்திருப்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்க சடங்காச்சாரங்களை ஒழுங்காய் கடைப்பிடிப்பதால் மட்டும் ஒரு பயனும் இல்லையென்பதை அநேக ஆண்டுகளுக்குப் பின்னரே அறிந்து கொண்டார். அதன் பிறகே தமக்கு மிகவும் தேவையாயிருந்த "இரட்சிப்பை" பெற தேவனிடம் திரும்பினார்.

1720ம் ஆண்டு 'சாட்டர் கவுஸ்' பள்ளியிலிருந்து ஜோன் வெஸ்லி 'ஆக்ஸ்போர்டிலுள்ள 'கிறைஸ் சேச்' (Christ Church) கல்லூரியில் படிக்கும்படி வந்தார். ஜோன் வெஸ்லி இதுவரை அறிந்திராத ஒரு புதிய சூழ்நிலையிலும், தனக்கு அறிமுகம் இல்லாமலிருந்த மாணவர்களின் கூட்டுறவிலும் இருக்க வேண்டியதாயிருந்தது. அந்நாட்களில் பல்கலைக் கழகங்கள் மிகுந்த ஒழுக்கக் கேடுள்ளவைகளாக இருந்தன. 'சாட்டர் ஹவுஸ்' பாடசாலையில் கற்கும் போது ஜோன் வெஸ்லியின் கிறிஸ்தவக் கொள்கைகளுக்கு பல சோதனைகள் நேரிட்டன. குழந்தைப் பருவத்தில் அவர் கற்றிருந்த நற்பழக்கங்கள் அவரிடம் காணப்படாமற் போயிற்று. ஆயினும் பக்திக்குரிய சில காரியங்களான **ஜெபவாழ்வும், வேதவாசிப்பும்** அவரிடத்திலே நிலைத்திருந்தன.

கல்லூரி வாழ்க்கையை ஆரம்பித்த பொழுது வெஸ்லிக்குத் தனது வாழ்க்கையைப் பற்றிய எந்தவொரு திட்டமான எண்ணமோ, உறுதியான குறிக்கோளோ இல்லாமல் இருந்தது. ஒரு காலத்தில் இங்கிலாந்தின் நடைமுறை வாழ்க்கையிலேயே ஒரு புரட்சியை ஏற்படுததிய வெஸ்லியிடம், அந்த விதமான வல்லமையும் நற்குணமும் இளமைப்பருவத்திலே காணப்பட்டனவா? என்ற ஆராய்வை யாராவது தொடுக்க முற்பட்டிருந்தால், நிச்சயம் அவர்கள் ஏமாற்றம் அடைந்திருப்பார்கள்.

ஜோன் வெஸ்லியுடன் கல்லூரியில் பயின்ற ஒருவர், இவர் பற்றிக் குறிப்பிடும் போது "அவர் மதிநுட்பமும், திறமையும் உள்ள மாணவராயிருந்தாரென்றும், தந்திரமாய் வாக்குவாதம் செய்யும் திறமையினால் யாரையும் இடைமறிக்கும் திறனும் அவருக்கிருந்தது. நகைச்சுவைப் பண்பும் ஒருசேர அமைய, அநேகரைக் கவர்ந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**(வெஸ்லி மீண்டும் வருவார்.....)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை புரிவாய் அனுதினமே

பாவியாக இருக்கையிலே தேடிவந்த பரனே – பரிசுத்த
ஆவியாலே நிரப்பும் எம்மை தினமே
தாவித்திரியும் குரங்கு போல மனமே – அதை
தடுத்து நிறுத்த கருணை புரிவாய் இக்கணமே.

மலைப் பிரசங்கத்தால் மனதை நிறைத்த மன்னா
உடல் சோர்வுக்கும் உணவளித்த எங்கள் தேவா
கடல் மேல வந்து காப்பாற்றிய கர்த்தா – என்றும்
உம்மைப் பற்றி வாழ கருணை புரிவாய் இத்தினமே.

பரலோகத்தில் எமக்காகப் பரிந்து பேசுபவரே
பரம தந்தையின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பவரே
வரவிருக்கும் ஆபத்தைப் போக்குபவரே – அதை
நினைத்து வாழ கருணை புரிவாய் அனுதினமே.

முத்தினத்தில் உயிர்த்தெழுந்த எம் தேவா
மூவ் வேளை தொழ உம் அருள் தா
எத்தர்கள் பலர் வாழும் இவ்வுலகில் – என்றும்
சுத்தர்களாய் வாழ கருணை புரிவாய் நிதமும்.

**குறிப்பு :** இவ்வரிகளைப் பாடல் வரிகளாக்கக் கூடியவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

-ஆசிரியர்.

"[illegible]"
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதிலளிக்கப்பட்ட ஜெபம்

கடவுளையும் மனிதனையும் தொடர்புபடுத்தும் சாதனங்களில் ஜெபம் பிரதான இடத்தை வகுக்கின்றது. பொதுவாக தனிநபர் மன்றாடல், சமூக மன்றாடல் என மன்றாடலை வகைப்படுத்தலாம். ஜெபம் இல்லாத வாழ்வு கூரையில்லாத வீடு போன்றது என அநேகர் கூறுவர். பொதுவாக நாம் எல்லோருமே ஜெப வாழ்வில் ஈடுபடுகின்றோம். பல சந்தர்ப்பங்களில் நாம் செய்யும் ஜெபங்களுக்கு பதில் கிடைக்கின்ற போதிலும் வேறுசில சந்தர்ப்பங்களில் விடை கிடைக்காமல் இருப்பதை எமது நாளாந்த வாழ்வில் அனுபவிக்கின்றோம். இங்கு ஜெபித்து பதிலைப் பெற்றுக்கொண்ட ஓர் அடியவனின் ஜெபத்தைக் குறித்து சிந்திக்கவுள்ளோம். நாமும் எமது ஜெப வாழ்வை மேற்கூறிய வகையில் அமைத்துக்கொள்ளும்போது இறைவனிடமிருந்து பதிலைப் பெறுவது நிச்சயம்.

யாபேஸ் என்ற மனிதன் இஸ்ரவேல் தேசத்தில் மிகவும் நெருக்கடியான சூழலில் வாழ்ந்து வருகின்றார். இஸ்ரவேல் மக்கள் பலவிதமான அரசியல், பொருளாதார, சமூக, கலை, கலாசார பின்னணிகளில் வாழ்ந்து வந்தனர். இத்தகைய சூழலில் யாபேசை அவன் தாயார் பெற்றெடுத்தபடியால் யாபேஸ் எனப் பெயரிட்டார். ஏனெனில் யாபேஸ் என்பதற்கு துக்கமுள்ளவன் என அர்த்தமாகும். இத்தகைய தனிமனித, சமூக, அனுபவங்களின் மத்தியிலேயே யாபேஸ் இறைவனை நோக்கி பின்வருமாறு மன்றாடுவதை 1 குறிப்பேடு 4:10 இல் நாம் வாசித்து அறியலாம்.

"கடவுளே! மெய்யாகவே நீர் எனக்கு ஆசி வழங்கி என் எல்லையைப் பெரிதாக்குவீராக!

உம் கை என்னோடு இருப்பதாக! தீங்கு என்னைத் துன்புறுத்தாது நீர் பாதுகாத்தருள்வீராக! என்று மன்றாடினார். கடவுளும் அவர் வேண்டியதை அருளினார்.

யாபேஸின் மன்றாடலை பொதுவாக மூன்றாக வகைப்படுத்தலாம். முதலாவதாக யாபேஸ் தன் கடவுளை நோக்கி கர்த்தாவே நீர் என்னை ஆசீர்வதியும் என மன்றாடினார். இரண்டாவதாக எனது எல்லையைப் பெரிதாக்கும் என வேண்டினார். மூன்றாவதாக உமது கரம் என்னோடு கூட இருந்து தீங்கிற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என வேண்டினார். குறிப்பாக யாபேஸ் கடவுளை நோக்கி கர்த்தாவே நீர் என்னை ஆசீர்வதித்தருளும் என செபிக்கின்றார். இஸ்ராயேலரை ஆசீர்வதிப்பதே இறைவனுக்குப் பிரியம் என்பதை எண்ணிக்கை 24:1ல் நாம் காணலாம். இதன் அடித்தளத்தில் யாபேஸ் கடவுளை நோக்கி எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி மன்றாடுகின்றார். கடவுளே நான் விரும்புகின்ற பிரகாரமோ இல்லையேல் எனது குடும்பத்தார் அல்லது எனது தேசம் விரும்புகின்ற பிரகாரமோ நீர் என்னை ஆசீர்வதியாமல் மாறாக நீர் விரும்புகின்ற பிரகாரம் என்னை ஆசீர்வதித்தருளும் என வேண்டுகின்றார். இம் மன்றாடலில் இறை திட்டத்திற்கு தன்னைப் பூரணமாக அர்ப்பணிக்கின்றார். தனது திட்டத்தில் இறைவனை இணைத்துக்கொள்ளாமல் இறைவனின் திட்டத்தில் தன்னை இணைத்துக் கொள்கின்றார். இப்பேர்ப்பட்ட ஜெபத்திற்கு ஆண்டவரால் பதிலளிக்காமல் இருக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாக, எனது எல்லைகளைப் பெரிதாக்கும் என மன்றாடுகிறார். அக்காலத்தில் எதிரிகளால் இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகள் சூழப்பட்டிருந்தன. இத்தகைய பின்னணியிலே................ வழிகளை ஆயத்தப்படுத்தித் தாரும் என மன்றாடுகின்றார். இன, மத, மொழி, சாதி, சமய, கலாசார, பால் வேறுபாடுகளால் இன்று எமது எல்லைகள் குறுகிப் போன ஓர் சூழலில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எனவே, நாமும் கடவுளை நோக்கி எமது எல்லைகளை நாம் பெரிதாக்கிக் கொள்ள எமக்கு அருள்புரியும் என மன்றாடுவோமாக!


மூன்றாவதாக உமது கரம் என்னோடு கூட இருந்து தீங்கிற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என ஜெபிக்கிறார். யாபேஸ் மனித கரங்களின் நிச்சயமற்ற ஆதரவற்ற நிலைகளை நன்கு உணர்ந்திருப்பார். எனவேதான் மனித கரங்களைத் தவிர்த்து இறைவா உம்முடைய கரங்கள் என்னோடு இருக்கட்டும் என மன்றாடுகின்றார். மேலும், கடவுளே! தீமை இவ்வுலகத்தில் எப்பொழுதும் நிலைகொண்டிருக்கும் என யாபேஸ் நன்கு அறிவார். ஆண்டவர் இயேசுவும் தமது உன்னத குருத் துவ ஜெபத்தின் போது தந்தையே தீமையை இவ்வுலகத்திலிருந்து அழித்துவிடும் என மன்றாடவில்லை. மாறாக, தீமையிலிருந்து எமது சீடரை பாதுகாத்தருளும் என மன்றாடுகிறார். இதன் அடித்தளத்திலேயே யாபேசும் கடவுளை நோக்கி தீமையிலிருந்து என்னைப் பாதுகாத்தருளும் என மன்றாடுகிறார்.

யாபேசினுடைய மன்றாடலைக் கேட்ட ஆண்டவர் உடனடியாக பதிலளித்தார் என திருமறை கூறுகின்றது. நாமும் எமது ஜெப வாழ்வில் கடவுளை நோக்கி இறைவா! நீர் விரும்புகின்ற பிரகாரம் எம்மை ஆசீர்வதித்து எம்மை தடுத்துநிறுத்தும் தடைச்சாவரங்களைத் தாண்டிச் செல்லும் வகையில் எமது எல்லைகளைப் பெரிதாக்கி தீமையிலிருந்து எம்மை விலக்கிக் காத்தருளும் என மன்றாடுவோம். கடவுள் நிச்சயமாக எமது மன்றாடலைக் கேட்டுப் பதிலளிப்பார்.



**அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன்**
**இலங்கை இறையியல் கல்லூரி,**
**பிலிமத்தலாவை.**


## மாபெரும் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும்



வாலிபனின் 3வது பிறந்த நாளை முன்னிட்டு முன்னொரு போதும் கண்டிராத **"மாபெரும் கிறிஸ்தவ புத்தகக் கண்காட்சியும், விற்பனையும்"** எதிர்வரும் 11.12.2010 காலை 8.00 முதல் மாலை 6.00 மணி வரை கோட்டைமுனை மெதடிஸ்த ஆலய வளாகத்தில் அமைந்துள்ள செல்வநாயகம் நினைவு மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இக்கண்காட்சிக்கு உங்கள் நண்பர்களையும், சபையாரையும் அழைத்துக்கொண்டு வாருங்கள்.

**குறிப்பு :** தங்களிடம் கிடைத்தற்கரிய காட்சிப்படுத்தக்கூடிய புத்தகங்கள் ஏதும் இருப்பின் எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.

அவசர அழைப்புக்கு :
077 7813269 / 077 9584930




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாலிபன்' ஓட்டத்தில் மூன்றாண்டுகள்

**"எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்" (சங். 115:1)**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலும், பரிசுத்த ஆவியானவரின் நிறைவான வழிநடத்துதலினாலும் கடந்த மூன்று வருடங்களும் "வாலிபன்" ஊழியங்களில் கர்த்தர் செய்த எண்ணற்ற ஆசீர்வாதங்களையும் மகத்தான காரியங்களையும் நினைந்து... அவருக்கு நன்றி செலுத்தும் முகமாக நன்றி செலுத்தும் வழிபாடு நடைபெறவுள்ளது.

**இறை செய்தியாளர் : அருள்பணி S.D.தயாசீலன்** (வடக்கு-கிழக்கு சபாசங்கத் தலைவர்)
**காலம் : 11.12.2010**
**நேரம் : மாலை 3.30 மணி.**
**இடம் : கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம், மட்டக்களப்பு**

இவ் நன்றி செலுத்தும் வழிபாட்டிற்கு சபை பாகுபாடின்றி உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**"வாலிபன்" குடும்பத்தினர்.**

# கவிதைப்போட்டி - 22

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**இறுதித் திகதி 04.12.2010**

"நானும் என் வீ[illegible] யாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்....." - (யோசுவா 24:15)

## கவிதைப் போட்டி - 21

"...திக்கற்ற பிள்ளைகளுக்கு சகாயர் நீரே..." (சங்.10:14)

யுத்தத்தின் நினைவால் – பிள்ளைகள்
சோகம் எனும் கடலின் நடுவினிலே
திக்கி தடுமாறும் வேளையில் – என்றென்றும்
படகினைப் போல் பிள்ளைகளை வழிநடத்தும் சகாயர் நீரே!

S.ஜெனேந்திரன்
மகிழூர்முனை 110A,
களுவாஞ்சிகுடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி - 35

உருவாக்கம் : J.சேரா

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | * | * | 3 |
| | * | * | * | 4 | 5 | 6 | |
| 7 | 8 | 9 | * | 10 | | | |
| 11 | | | * | * | * | 12 | |
| 13 | | | 14 | 15 | * | 16 | |
| * | | * | 17 | | * | * | * |
| 18 | | | | | | * | * |
| * | * | * | * | | * | * | * |

## இடமிருந்து வலம்

01. ஏழெழுபது தரம் மட்டும் இது கொடுக்க வேண்டும் என்றார் இயேசு.
04. மனுஷன் தன்னைக் கெடுத்து இப்படியாக்கினால் லாபம் என்ன? (குழம்பியுள்ளது).
07. இயேசு பாடுபட்ட போது நாம் விரும்பத்தக்க இது அவருக்கு இல்லாதிருந்தது.
10. வாதை இதனை அணுகாது. (குழம்பியுள்ளது).
11. இதினால் ஆகாதது தேவ ஆவியால் ஆகும். (குழம்பியுள்ளது - உதவி : சகரியா)
12. தானியேல் வேண்டிக்கொள்ளத் தொடங்கின போதே இது வெளிப்பட்டது. (கடைசி 2 எழுத்துக்களில்லை).
13. வேதத்தில் வரும் ஒரு கீத வாத்தியம் திரும்பியுள்ளது.
16. பெற்றோருக்குக் கொடுக்க வேண்டியது. திரும்பியுள்ளதுடன் நடு எழுத்தில்லை.
17. இயேசு சிலுவையில் பிதாவைக் கூப்பிட்ட வார்த்தைகளுள் இதுவும் அடங்கும்.
18. இதினாலே தன்னை சோதித்துக் பார்க்கும் படி தேவன் கூறுகிறார். (கடைசி 2 எழுத்துக்களும் மாறியுள்ளன).

## மேலிருந்து கீழ்

01. இயேசு இப்படியான போது அவர் முகம் பிரகாசித்தது.
02. வெள்ளியை இப்படிச் செய்து சுத்திகரிப்பது போல தேவனும் செய்வார்.
03. அவனவன் விசனமாயும் இப்படியுமல்ல, தன் மனதில் நியமித்தபடி கொடுக்கக்கடவன் (குழம்பியுள்ளது) உதவி : 2 கொரிந்தியர்.
05. காமுடைய குமாரரில் ஒருவன் தலைகீழ்.
06. இங்கு நித்திய ஆக்கினை உண்டு.
08. பாவத்தின் இது மரணம். (குழம்பியுள்ளது)
09. சந்திரனை இந்தக் குறிப்புக்காக தேவன் படைத்தார். (தலைகீழ்)
உதவி : சங்கீதம்.
14. மோவாபியருக்கு ராஜாவாயிருந்தவன் (தலைகீழ்) உதவி : எண்ணாகமம்
15. எருசலேமுக்கு ஏழு அல்லது எட்டு மைல் தூரமான கிராமம். (குழம்பியுள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34 இற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01. வாலிபன்
05. சதை
06. அபிகாயில்
08. குற்றம்
09. கிரயம்
12. ஸ்திவ (வஸ்தி)
13. அன்பு
14. தும்ன் (துன்பம்)
15. ம்பசா (சாபம்)
16. றித் (சாறிபாத்)
17. தாபத்எ (எப்பத்தா)
18. சத்தியம்

**மேலிருந்து கீழ்**

01. வாதை
02. பஅற்ம் (அற்பம்)
03. ன்பிற (பிறன்)
04. கல்
07. காம்
08. குயவன்
09. கிஸ்துறி (கிறிஸ்து)
10. ரதிம்தச (சத்திரம்)
11. தான்சாத் (சாத்தான்)
13. அப்ம் (அப்பம்)
15. ம்பய (பயம்)
17. தாதி

**குறுக்கெழுத்துப் போட்டி 34க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி**

### V.ஜெஷான்

மகிளூர்முனை - 110A, களுவாஞ்சிகுடி.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 35ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 04.12.2010**

**அனுப்ப வேண்டிய முகவரி :**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப்போட்டி - 35
"வாலிபன்",
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்
மட்டக்களப்பு.

# சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி - 27

1) எஸ்தர் ராஜாத்தியின் மாமா யார்?

...............................................................................

2) ரூத்தை மறுமணம் செய்தவர் யார்?

...............................................................................

3) சாலமோனின் தாயின் பெயர் என்ன?

...............................................................................

4) போவாசின் தாயின் பெயர் என்ன?

...............................................................................

5) தாவீதின் தகப்பன் பெயர் என்ன?

...............................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா விடைப் போட்டி**
**26 இற்கான விடைகள்**

1) மனிதன், மரங்கள், ஜீவஜந்துக்கள்
2) ஆகார்
3) லேயாள், ராகேல், பில்காள், சில்பாள்
4) ரெபேக்காள்
5) ராகேல்

**வினா விடைப் போட்டி 26 இற்கான சரியான விடை எழுதி பரிசுபெறும் அதிஷ்டசாலி**

**S.கிறிஸ்ரினா**
பாரதி லேன், மட்டக்களப்பு.

☞ இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.

☞ வினா விடைப்போட்டி **27** இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : **04.12..2010**

அனுப்ப வேண்டிய முகவரி :
**ஆசிரியர்,**
வினாவிடைப் போட்டி - 27
'வாலிபன்' -
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.

## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

# நில்! கவனி! முன்னேறு!

அன்பை நீ தரித்திடடா - பிறருக்கு
அடைக்கலமாய் இருந்திடடா
இயேசுவிடம் வந்திடடா - பாவ
இச்சையை நீ வெறுத்திடடா

நீதியாக வாழ்ந்திடடா- பிறருக்கு
நிம்மதியைக் கொடுத்திடடா
சந்தோஷமாய் இருந்திடடா - உன்
சந்தேகத்தை இன்றே நிறுத்திடடா

பாவத்தை நீ வெறுத்திடடா - இப்
பாரிற்கு ஒளியாக விளங்கிடடா
பொறுமையாக வாழ்ந்திடடா- உள்ளிருக்கும்
பொறாமைதனை எறிந்திடடா

உண்மையாக வாழ்ந்திடடா - நம்
உயிருள்ள இயேசுவையே வணங்கிடடா
சிந்திக்கும் நேரமடா- இன்றே
செயற்படும் காலமடா



ஜெ.ஜேம்ஸ் சர்வானந்தன்
கோட்டைமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"*Hello Brother / Sister!* எங்க போறீங்க...? *Church*-க்கு வரலயா....?"; "*Oh, I'm sorry.* எனக்கு *Time* இல்ல, *Class / Work* இருக்கு, நான் வரல்ல" என்று சொல்லி ஓடி மறைபவரா நீங்கள்... கொஞ்சம் *break* போட்டு நில்லுங்க....எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று சற்று சிந்திப்போம்

கர்த்தர் நம் ஒவ்வொருவருக்கும் ஒருநாளில் 24 மணித்தியாலங்களைக் கொடுத்திருக்கிறார். அதில் எத்தனை மணித்தியாலத்தைக் கர்த்தருக்காக கொடுக்கிறோம்? எப்போ பார்த்தாலும் *Class, Class! Ok.* நாம் படிக்கத்தான் வேண்டும். ஆனால் படிக்கின்ற காரியங்கள் நினைவில் இருப்பதற்குக் கர்த்தரின் கிருபை வேண்டும். நாம் பரீட்சைக்குச் செல்லும் வரையிலும் கர்த்தரைக் குறித்து யோசனையில்லை. பரீட்சை நாள் அன்று *Special Prayer* செய்வோம். வேலை செய்பவர்களுக்கு எப்போ பார்த்தாலும் *Busy, Extra* வேலை செய்தால் கூடுதலாக *Salary* கிடைக்கும்...

பிரியமானவர்களே! நீங்கள் கல்வியில் சிறந்து விளங்கவும், தொழிலில் சிறந்து விளங்கவும் கர்த்தரின் கிருபை வேண்டும். கர்த்தர் உங்களுக்காக யாவையும் செய்து முடிக்கிறார் அல்லவா! ஆனால், அவருக்கு சில மணிநேரம் கொடுக்க நாம் தயங்குகிறோம். *Class* போகா விட்டால் *Sir* அடிப்பார் என்கிறோம். *Class* சில் *Time set* பண்ணும் போது வேறு *Class time* ஆக இருந்தால் கைகளை உயர்த்தி *time* ஐ எமக்கு ஏற்றதாக மாற்றுகிறோம். இதேவேளை *Sundays* இல் *Class* போடும் போது எத்தனை பேர் கைகளை உயர்த்தி "நான் *Church Service* க்குப் போகவேண்டும்" என்று கூறுகிறோம்? சிந்தியுங்கள்...

இயேசுக்கிறிஸ்துவை சோதிக்கும்படி பரிசேயர், வரி செலுத்துவது சரியா? அல்லது தவறா? என்று கேட்டபோது, அவர் பிரதியுத்தரமாக, வரிக் காசைக் காட்டும்படி கூறினார். அதைப்பார்த்து "இந்த சுரூபமும், மேலெழுத்தும் யாருடையது?" என்று கேட்டார். "இராயனுடையது" என்றார்கள். அதற்கு இயேசு " அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள்" என்றார். (மத்தேயு 22:20-21)

பார்த்தீர்களா....! எவ்வளவு அழகாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடையதை கர்த்தருக்குக் கொடுங்கள். அப்போது கர்த்தர் சந்தோஷப்படுவார். உங்களை யாவற்றிலும் உயர்த்துவார். விழுந்துபோக மாட்டீர்கள். பரலோகத்தில் உங்களுக்கான இடத்தைத் தக்கவைத்துக் கொள்வீர்கள். கர்த்தரை உதாசீனம் செய்து, அவருக்குரியதை அவருக்கு செலுத்தாமல் இருந்தால், அவர் நம்மைக் கைவிட்டுவிடுவார். நாம் அவருக்காகவே உருவாக்கப்பட்டோம் என்பதை மறந்து போகக்கூடாது....

இப்ப நீங்கள் போகலாம். *Brother/Sister, Sunday Classes time* ஐ மாற்றம் செய்யுங்கள். போங்க... கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். *Bye!!*

சகோதரன் கு.சுரேன் – கோட்டைமுனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது பிரதானம்?



"...தேவனுடைய இராஜ்ஜியத்தையும்..." (மத் 6:33)

**ப**தினைந்து வருடங்களுக்கு முன் நான் ஒரு விடுமுறை வேதாகமப் பாடசாலையில் கலந்து கொண்டபோது, காலைக் கூட்டம் ஒன்றிலே ஒரு தேவ ஊழியர் சில வினாக்களை எங்கள் முன் வைத்தார்.

"பிள்ளைகளே! ஒரு பெரிய தராசு இருக்கிறது. அதில் ஒரு பக்கம் விதவிதமான பழங்களும் மற்றைய பக்கம் பாகற்காய், மிளகாய் என்பனவும் வைக்கப்பட்டுள்ளன. இதில் எந்தப் பக்கத்தில் உள்ளவற்றை மிகவும் விரும்புவீர்கள்?" என்று கேட்டார். "பழங்களைப்... பழங்களை..." என்று எல்லோரும் சத்தமிட்டோம். மீண்டும் அவர் "சரி, இப்போது ஒரு பக்கம் நீங்கள் விரும்பும் அதே பழங்களும், மறுபக்கம் உங்களுடைய பெற்றோரும் வைக்கப்பட்டால்..." அவர் முடிக்கும் முன்பாகவே "எங்களுடைய அம்மா, அப்பா..." என்று கூறினோம். தொடர்ந்தும் அவர், "சரி, இப்போது ஒரு பக்கம் உங்கள் பெற்றோரும், மறுபக்கம் இயேசப்பாவும் வைக்கப்பட்டால் யாரை மிகவும் விரும்புவீர்கள்?" என்று வினவினார். எங்களோடு இருந்த அண்ணாமார்களும், அக்காமார்களும் "இயேசப்பா..." என்று கூற, கண்களைப் பிதுக்கிய குட்டீஸ், அண்ணா, அக்காவை ஆ... என்று பார்த்தபடி நின்றனர்! அதில் நானும் ஒருத்தி

இந்தக் கேள்வி என்னை அன்றே சிந்திக்க வைத்தது. என்னுடைய வாழ்க்கையிலே இயேசப்பா எல்லாவற்றையும் விட முக்கியமாய் இருக்கின்றாரா???

பெற்றோர், படிப்பு, வேலை என்பவற்றினை முக்கியமாய் கொண்டு, இரண்டாம் பட்சமே கடவுள் என்று கூறும் பலரை நாம் நாளாந்தம் சந்திக்கிறோம்; ஏன் நாம் கூட இந்த வகையினராய் இருக்கலாம்! இதைக் குறித்துப் பேசுகிறபோது கிடைக்கின்ற வியாக்கியானங்கள்;

பெற்றோர் ✦ கர்த்தர் தந்துள்ள மிகப் பெரிய சொத்து.
✦ பத்து கட்டளைகளில் ஒன்று கனம் பண்ணுவது.

கல்வி ✦ கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்.
✦ கல்வியில் சிறந்த விளங்குவது கர்த்தருக்கு மகிமை.

வேலை ✦ கர்த்தர் தருகிற ஈவு.
✦ உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரன் என கர்த்தரால் அழைக்கப்பட, முழு நேரத்தையும் வேலைக்கே அர்ப்பணிக்க வேண்டும்.

ஆம், இவை அனைத்தும் உண்மைதான்!!! ஆனால்... தராசின் ஒரு பக்கம் உன் பெற்றோரும், மறுபக்கம் இயேசப்பாவும்; ஒரு பக்கம் உன் கல்வியும், மறுபக்கம் ஆண்டவரின் காரியங்களும்; ஒரு பக்கம் உன் வேலையும், மறுபக்கம் கர்த்தரின் ஊழியமும் வைக்கப்படும் போது உனது தெரிவு எதுவாக அமையக்கூடும்?

✦ பெற்றோரைக் கனம்பண்ணுவது அவசியமே!
✦ கல்வியில் சிறந்து விளங்குவது நல்லதே!
✦ வேலைக்காக நேரம் அதிகம் கொடுப்பது சரியே!

ஆனால் எம்முடைய வழ்க்கையில் இயேசப்பா, அவருடைய காரியங்கள், அவருக்காய் செய்யும் ஊழியங்கள் மிக முக்கியமான இடங்களைக் கொள்ளும் போது, மற்றைய அனைத்தும் அதிக ஆசீர்வாதமாய் கிடைக்கும் என்பதும் உண்மையே!

**மத்தேயு 10:37 சொல்வதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்வோம்....**

**சகோதரி R. நியோமி கஜானினி**
கோட்டைமுனை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கிறிஸ்துவுக்காய் பாடுவேன்"
# பாடல் போட்டி – 2010



"வாலிபன்" ஊழியங்களின் மூன்றாவது ஆண்டு நிறைவை யொட்டி எதிர்வரும் 11.12.2010 அன்று கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில் மேற்படி பாடல் போட்டி நடைபெற வுள்ளது. ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம். இதில் வெற்றி பெறு பவர்களுக்கு சிறப்பு பரிசில்கள் காத்திருக்கின்றது.

**பிரிவு 1 ➡ 15 வயதும் அதற்கு கீழ்ப்பட்டவர்களும்**
**பிரிவு 2 ➡ 16 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும்**

இப்போட்டியில் பங்குபெற விரும்புபவர்கள் இக்கூப்பனைப் பூர்த்தி செய்து 04.12.2010க்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

---

**"கிறிஸ்துவுக்காய் பாடுவேன்" பாடல் போட்டி – 2010**

பெயர் :.......................................................................................

விலாசம் :.......................................................................................

பிறந்த திகதி :.................................. வயது :..................................

தொலைபேசி :.................................. **Mobile** :..................................

**E-mail** :.......................................................................................

---

**அனுப்பி வைக்க வேண்டிய முகவரி**

**"கிறிஸ்துவுக்காய் பாடுவேன்" பாடல் போட்டி 2010**
**ஆசிரியர்**
**'வாலிபன் சஞ்சிகை',**
**மெதடிஸ்த ஆலயம்,**
**கோட்டைமுனை, மட்டக்களப்பு.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



J.Charles

# வேதமும் விஞ்ஞானமும்

வேதத்திலே ஆதியாகமத்தில் தேவனுடைய படைப்புக்களைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. அதில் பூமியைக் குறித்து, ''பின்பு தேவன் வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது'' என்றார். அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்....(ஆதி.1:9-10) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது தேவன் சிருஷ்டித்த பூமி சமுத்திரத்தின் மத்தியில் உருவாக்கப்பட்ட பிளவுபடாத ஒரு தனி நிலப்பரப்பாகும். ஆனால் இன்றைய பூமியின் வரைபடத்தைப் பார்த்தோமானால் அது பல நிலப்பரப்புக்களாக (சமுத்திரங்களால் பிரிக்கப்பட்ட கண்டங்களாக) உள்ளன. பூமியினுடைய இன்றைய இத்தோற்றப்பாடு ஆதியாகமத்திலே குறிப்பிடப்பட்ட பூமியிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. இது நமக்குச் சிலவேளைகளில் தேவனுடைய வசனத்தைக் குறித்துச் சந்தேகத்தை ஏற்படுத்தலாம். நம்மில் சிலர் வேதத்தில் கூறப்பட்டவை களெல்லாம் உண்மையல்லவென்றும் வாதிட முற்படலாம்.

நாம் ஒன்றைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்; வேதத்தில் கூறப்பட்டவைகள் வெறும் கற்பனைக் கதைகளல்ல, மாறாக அவை உண்மையுள்ள தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளாகும். இப்போது நாம் இருக்கிற பூமியின் தோற்றப்பாட்டைக் குறித்துச் சற்று ஆராய்வோம். நாம் ஒரு உலக வரைபடத்தை எடுத்து பிரிந்திருக்கிற நிலப் பரப்புக்களை (கண்டங்களை) ஒன்றோடொன்று பொருத்திப் பார்த்தோமானால் அவைகள் சரியாகப் பொருந்தி அது ஒரு தனி நிலப்பரப்பாக மாறுவதைக் காணலாம். உதாரணமாக தென் அமெரிக்கக் கண்டம் ஆபிரிக்கக் கண்டத்தோடும், ஆபிரிக்கக் கண்டம் ஐரோப்பாக் கண்டத்தோடும், வட அமெரிக்கா, கிறீன்லாந்து தீவுப் பகுதி ஐரோப்பாவுடனும், அவுஸ்திரேலியா ஆசியாவோடும் சேர்ந்து ஒரு முழு நிலப்பரப்பாக மாறுவதை அவதானிக்கலாம். இதை *"Pangaea"* *(All land)* என்று புவியியல் ஆராய்ச்சியாளர்கள் அழைக்கிறார்கள். இவர்கள் பூமி முன்னொரு காலத்தில் தனியொரு நிலப்பரப்பாக இருந்தது என்றும், பின்னர் அது பல துண்டுகளாக உடைந்து மெதுவாக நகர்ந்து இன்றிருக்கிற நிலையை அடைந்ததென்றும் ஆதாரத்தோடு நிரூபித்திருக்கிறார்கள். இந்தக் கொள்கையை ஜேர்மனியைச் சேர்ந்த புவியில் ஆராய்ச்சியாளரான *Alfred Wegener* என்பவர் 1930 காலப்பகுதிகளில் முன்வைத்தார். இக்கொள்கை பின்னர் நிரூபிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது ஆதியாகமத்திலே குறிப்பிடப்பட்ட பூமியின் தோற்றத்தையும் வேதத்திலுள்ள தேவனுடைய வசனத்தையும் உறுதிப்படுத்துகிறது.

ஆதியாகமத்தில் பூமியின் தோற்றத்தைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியின் பிளவைப் பற்றி வேதத்தில் எங்கேனும் கூறப்பட்டுள்ளதா, அவைகள் பல துண்டுகளாக உடைந்து அசைகின்றன என்றும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதா? "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்". (சங்.119:18) ஆம்! தேவன் தாம் செய்ததையும், செய்யப்போவதையும் குறித்து வேதத்தினூடாக இவ்வுலகிற்கு வெளிப்படுத்தியிருக்கிறார். சில வேளைகளில் நவீன விஞ்ஞான உலகில் வாழ்கிற நாம், வேதத்தின் அதிசயங்களைக் காணாதபோது, உலகிற்குப் பின்னால் சென்று விசுவாசத்தையும் இழந்துவிடுகிறோம். ஆனால் தேவனுடைய மகிமையை வேதம் வெளிப்படுத்துகிறது. இப்போது நாம் சங்கீதம் 60:2 என்ன சொல்லுகிறதென்று பார்ப்போம்.

"பூமியை அதிரப்பண்ணி, அதை வெடிப்பாக்கினீர்; அதின் வெடிப்புக்களைப் பொருத்தப்பண்ணும்; அது அசைகின்றது". ஆம்! 1930 காலப்பகுதிகளில் உலகிற்கு வெளிப்படுத்தப்பட்ட பூமியின் இன்றைய தோற்றப்பாட்டின் இரகசியத்தைக் குறித்து ஏற்கனவே இன்றிலிருந்து கிட்டத்தட்ட 3000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தேவன் தாவீதுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். மேலும் ஆகாய் தீர்க்கதரிசி இவ்வாறு கூறுகிறார். "சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: கொஞ்சக் காலத்துக்குள்ளே இன்னும் ஒருதரம் நான் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் வெட்டாந்தரையையும் அசையப் பண்ணுவேன்" (ஆகாய் 2:6). இங்கே பூமியை இன்னுமொரு தரம் அசையப் பண்ணுவேன் என்பதன் கருத்து. ஏற்கனவே தேவன் பூமியை ஒருதரம் அசையப்பண்ணியிருக்கிறார் என்பதல்லவா? ஆனாலும் எப்போது பூமி பல நிலப்பரப்புக்களாக தேவனால் பிளவுபடுத்தப்பட்டது என்பதைப் பற்றி வேதத்தில் தெளிவாகக் கூறப்படவில்லை. ஆகிலும் வேதத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது; ஏபேருக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள். ஒருவனுக்குப் பேலேகு என்று பெயர்; ஏனெனில் அவனுடைய நாட்களில் பூமி பகுக்கப்பட்டது...." (ஆதி. 10:25). இது பூமியானது பல கண்டங்களாகப் பிரிக்கப்பட்டதைத்தான் கூறுகிறதா என்பதை நாம் தெளிவாக அறியோம்.

"என் கரமே பூமியை அஸ்திபாரப்படுத்தி, என் வலது கை வானங்களை அளவிட்டது; நான் அவைகளுக்குக் கட்டளையிட அவைகள் அனைத்தும் நிற்கும்" (ஏசாயா 48:13). "நீர் உம்முடைய ஆவியை அனுப்பும் போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும்" நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர். அவர் பூமியை நோக்கிப் பார்க்க, அது அதிரும்; அவர் பர்வதங்களைத் தொட அவைகள் புகையும்" (சங்.104:30,32)

ஆம்! உலகில் நாம் காண்கிற அதிசயங்களனைத்தும் தேவனுடைய மகத்துவத்தையே வெளிப்படுத்துகின்றன. "அவர் பர்வதங்களைச் சடுதியாய்ப் பெயர்க்கிறார்; தம்முடைய கோபத்தில் அவைகளைப் புரட்டிப் போடுகிறார். பூமியின் தூண்கள் அதிரத்தக்கதாய் அதை அதின் ஸ்தானத்தினின்று அசையப் பண்ணுகிறார். ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்" (யோபு 9:5 – 6, 10) இப்படிப்பட்ட அதிசயங்களைச் செய்கிறவரைக் குறித்து ஞானவான் சாலொமோன் இவ்வாறு கூறுகிறார். "வானத்துக்கு ஏறியிறங்கினவர் யார்? காற்றைத் தமது கைப்பிடிகளில் அடக்கினவர் யார்?.... பூமியின் எல்லைகளையெல்லாம் ஸ்தாபித்தவர் யார்? அவருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன? அதை அறிவாயோ?" (நீதி.30:4). இதற்கு நமது பதில் என்ன? நாம் அதை அறிவோம். அவருடைய நாமம் யெகோவா. அவர் குமாரனுடைய நாமம் இயேசு. ஆமென்.

***Reference:***



- *Geotechnical earthquake engineering by Steven,L,Kramer, Published year 1996, Page No.23.*
- *Holy Bible*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நீதிமான்' பற்றி நீதிமொழிகளிலிருந்து....

(கடந்த மாதத் தொடர்ச்சி....)



- "நீதிமான்களுக்குள்ளே தயை உண்டு". (நீதி.14:9)
- "......துன்மார்க்கர் நீதிமான்களுடைய வாசற்படிகளிலும் குனிவதுண்டு" (14:19)
- "நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன்" (நீதி.14:32)
- "நீதிமானுடைய வீட்டில் அதிக பொக்கிஷமுண்டு" (நீதி. 15:6)
- "நீதிமானுடைய வழியோ ராஜபாதை" (நீதி. 15:19)
- "நீதிமானுடைய மனம் பிரதியுத்தரம் சொல்ல யோசிக்கும்" (நீதி. 15:28)
- "நீதிமான்களின் ஜெபத்தையோ (கர்த்தர்) கேட்கிறார்" (நீதி. 15:29)
- "நீதிமானைத் தண்டம் பிடிக்கிறதும், நியாயஞ் செய்கிறவனைப் பிரபுக்கள் அடிக்கிறதும் தகுதியல்ல". (17:26)
- "கர்த்தரின் நாமம் பலத்த துருகம். நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" (நீதி. 18:10)
- "நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான்" (20:07)
- "நீதிமானோ பிசினித்தனமில்லாமல் கொடுப்பான்" (21:26)
- "நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்" (23:24)
- "நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்" (24:16)
- "நீதிமான்களோ சிங்கத்தைப் போலே தைரியமாயிருக்கிறார்கள்" (28:01)
- "நீதிமான்கள் களிகூரும் போது மகா கொண்டாட்டம் உண்டாகும்" (28:12)
- "அவர்கள் (துன்மார்க்கர்) அழியும்போதோ நீதிமான்கள் பெருகுகிறார்கள்" (28:28)
- "நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள் " (29:02)
- "நீதிமானோ பாடி மகிழுகிறான்" (29:06)
- "நீதிமான்களோ அவர்கள் (துன்மார்க்கர்) விழுவதைக் காண்பார்கள்" (29:16)
- "நீதிமானுக்கு அநியாயக்காரன் அருவருப்பானவன்" (29:27)

சகோதரி. J. டெய்சி
கோட்டைமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 140வது ஆலய ஆண்டு விழா
# 1870 - 2010




கோட்டைமுனை மெதடிஸ்த திருச்சபையின் 140வது ஆலய ஆண்டு விழா அண்மையில் கார்த்திகை மாதம் 5ம், 6ம், 7ம் திகதிகளில் இடம்பெற்றது. இதற்கு பிரதம இறை செய்தியாளராக **அருள்பணி S.D.தயாசீலன்** (சபாசங்கத் தலைவர், வடக்கு-கிழக்கு திருமாவட்டம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.



6ம் திகதி சனிக்கிழமை ஞானஸ்நானமும், திடப்படுத்தலும் இடம்பெற்றது. அன்றைய நாள் கலை நிகழ்வுகளும், முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் வேதாகம படிப்புகளும் இடம்பெற்றது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













"கர்த்தரைப் பாடி,
அவருடைய நாமத்தை
ஸ்தோத்தரித்து நாளுக்கு
நாள் அவருடைய
இரட்சிப்பைச் சுவிசேஷமாய்
அறிவியுங்கள்"

(சங்கீதம் 96:2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்த்தருக்கென்று ஒரு நாளை நியமியுங்கள்!

## December 11th, 2010

**'வாலிபன்' ஊழியங்களின் மூன்றாண்டு நிறைவையொட்டி மகிழ்ந்து களிகூறும்**



கிழக்கின் பல சபைகளும் கிறிஸ்தவ நிறுவனங்களும்
இணைந்து நடாத்தும்



## மாபெரும் கிறிஸ்தவ புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்....

## "கிறிஸ்துவுக்காய் பாடுவேன்" -பாடல் போட்டிகள்

சபைப் பாகுபாடின்றி வயது வித்தியாசமின்றி கிறிஸ்துவுக்காய் யாரெல்லாம் பாட விரும்புகிறார்களோ: உங்களுக்கான மேடை இது. மிகச் சிறந்த இசையில்!!!



## மாலை நன்றி செலுத்தும் வழிபாடு

அனைவரையும் ஆண்டவராகிய இயேசுவை மகிமைப்படுத்த வருந்தி அழைக்கின்றோம். ***Please...***

## சிறப்பு சலுகை விலை உணவகம் அனோஜன் தலைமையில்...

அனைவரும் சபையாக, குடும்பமாக, நண்பர்களாக, உற்றார் உறவினர்களாக வந்து கலந்து, மகிழ்ந்து களிகூறுங்கள்!

வாலிபன் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org